Marked for 70%

# கொழும்புப் பல்கலைக்கழகம், இலங்கை

## சட்ட பீடம்

## மனித உரிமைகள் கற்கை நிலையம்

### மனித உரிமைகளிலும் சமாதானக் கற்கைகளிலுமான தொலைதூர டிப்ளோமா கற்கைநெறி- 2009 / 2010

பத்திரம் I
(இரண்டு மணித்தியாலம்)

வினாக்களின் மொத்த எண்ணிக்கை:06

__மூன்று__ வினாக்களுக்கு __மட்டும்__ விடை தருக.

(தெளிவற்ற கையெழுத்துக்குப் புள்ளிகள் குறைக்கப்படும்)

1. மனித உரிமைகள் யாவும் சட்ட உரிமைகளே என்பதை விளக்குக. அனைத்துலக உரிமைகள் என்ற கருத்தேற்புடன் இசைவுறுகின்றதான உமது மதஞ்சார்ந்த அல்லது வேறேதேனும் நம்பிக்கைகள் சிலவற்றை அடையாளங் காண்க.

2. மனித உரிமைகளுக்கும் ஜனநாயகத்துக்கும் இடையிலான தொடர் பென்ன? அரசுகள் தமது பிரசைகள் தொடர்பில் அளவிறந்த தத்துவத்தைக் கொண்டிருக்கவில்லை எனக் கருதப்படுவது ஏன்? உமது விடையினை ஜனநாயகத்தின் அத்தியாவசிய சிறப்பம்சங்களைச் சுட்டிக்காட்டி விளக்கியுரைக்க.

3. "உரிமைகள் பட்டயம்" ஒன்று எந்தவொரு ஜனநாயக நாட்டுக்கும் அவசியமானது எனக் கருதப்படுவது ஏன்? தனது நாட்டின் உரிமைகள் பட்டயத்தினைப் பொருள்கோடல் செய்கையில் உதவுவதற்கென சர்வதேச மனித உரிமைகள் சாதனங்களை உதவிக்கழைத்தல் நீதி மன்றமொன்றுக்கு முறையானதாகுமா? உமது விடைக்கான காரணங் களைத் தருக.

4. 'சிம்கானா' என்பது கடந்த ஒரு தசாப்தத்துக்கு முன்புதான் தனது குடியேற்ற ஆட்சியாளர்களிடமிருந்து சுதந்திரம் பெற்ற சிறியதொரு வளர்முக நாடாகும். அண்மைய சுனாமி அனர்த்தம் காரணமாக அது மோசமான உணவுப் பஞ்சத்தை அனுபவிக்கின்றது. நிலைமையைக் கட்டுப்படுத்தும் நோக்கில் சிம்கானா அரசாங்கமானது சட்டவாக்க மொன்றை நிறைவேற்றுவதுடன் அதன் கீழ், மக்கள் தங்கள் இடங்களிலிருந்து நீங்கி நகரத்தை நோக்கி இடம்பெயர்வதும் தடுக்கப்படுகின்றது. பாதிக்கப்பட்ட மக்களுக்கு, அவர்கள் சுதந்திரமாக

நடமாடுவதற்கென, வாகனங்களைக் கொடுத்துதவ சர்வதேச முகவர் நிறுவனங்கள் பல முன்வந்தபோதிலும் அரசாங்கம் அதனை அங்கீக ரித்திருக்கவில்லை. அதன் விளைவாக, நாட்டிலிருந்த மிகப் பெரிய சர்வதேச அரசாங்க சார்பற்ற நிறுவனமொன்று தனது அலுவலகத்தை மூடிவிட்டு வெளியேறுகின்றது.

மேலே விவரிக்கப்பட்ட நிலைமையில் சம்பந்தப்படும் 'உரிமைகள் பிரச்சனைகள்' மீது கருத்துரைத்து சிம்கானாவின் வெளிவிவகார அமைச்சருக்கு அறிக்கை ஒன்றினை தயாரிக்கவும். உமது கருத்துரைகளுக்கான காரணங்களைத் தருக.

5. "மனித உரிமைகளும் அரசின் இறைமையும் ஒன்றோடொன்று இசைவுறாத கருத்தேற்புக்கள் அல்லவென்றாலும், அரசொன்றின் அதிகாரங்களை மட்டுப்படுத்துதல் என்பது அந்த அரசின் உள்நாட்டு விவகாரங்களில் தலையிடுவதாக அமையும் என்றே பலரும் நம்புகின்றனர்."

நீர் உடன்படுகின்றீரா? உமது விடைக்கான காரணங்களைத் தருக.

6. பின்வருவனவற்றுள் எவையேனும் **மூன்றினைப்** பற்றிக் குறிப்பெழுதுக:

(அ) மனித உரிமைகள் பேரவை (Human Rights Council);

(ஆ) Eichmann வழக்கு விசாரணை, 1961;

(இ) சர்வதேச குற்றவியல் நீதிமன்றின் சுதந்திரமான வழக்குத்தொடுனர்;

(ஈ) மனித உரிமைகள் சாதனங்களில் உள்ள 'இடைநிறுத்தப்பட முடியாத" வாசகங்கள் ;

(உ) மனித உரிமைகள் பொருத்தனைகளின் இயல்பு.

********

**கொழும்புப் பல்கலைக்கழகம், இலங்கை**

**சட்ட பீடம்**

**மனித உரிமைகளுக்கான கற்கை நிலையம்**

**மனித உரிமைகள் மற்றும் சமாதான கற்கைகளிலான**
**தொலைக்கல்வி டிப்ளோமா – 2009/2010**

**சமாதான கற்கைகள் (பத்திரம் II )**

(இரண்டு மணித்தியாலம்)

வினாக்களின் மொத்த எண்ணிக்கை: 06

மூன்று (03) வினாக்களுக்கு மாத்திரம் விடையளிக்க.

(தெளிவற்ற கையெழுத்திற்குப் புள்ளிகள் குறைக்கப்படும்.)

1. பின்வருவனவற்றை விளக்குக:

   (அ) முரண்பாடு

   (ஆ) சமாதானம்

   (இ) சமாதானத்தைக் கட்டியெழுப்புதல் (Peace building)

2. பின்வரும் உடன்படிக்கைகள் / ஒப்பந்தத்தின் முக்கிய அம்சங்களை விளக்குக:

   (அ) 1957 ஆம் ஆண்டு பண்டாரநாயக்க – செல்வநாயகம் உடன்படிக்கை

   (ஆ) 1965 ஆம் ஆண்டு டட்லி சேனநாயக்க – செல்வநாயகம் உடன்படிக்கை

   (இ) 1987 ஆம் ஆண்டு இலங்கை – இந்திய ஒப்பந்தம் (Accord)

3. சமாதானமானது மக்களின் உரிமையொன்றாகுமா என ஆராய்க.

4. இலங்கையில் முரண்பாடுகளுக்கான முக்கிய காரணங்களை (causes) ஆராய்க.

5. முரண்பாடுகளுக்குத் தீர்வு காண்பதற்குக் கிடைக்கக் கூடியதாகவுள்ள வேறுபட்ட வழிமுறைகளை விளக்குக.

6. சர்வதேச சமாதானத்தைப் பேணுவதில் ஐக்கிய நாடுகள் தாபனமானது (UNO) திருப்திகரமானதொரு பங்கை வகிக்கின்றதா என ஆராய்க.

*****